JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

MC.No. 48/2024 Date:07.02.2026 P.W. 1 / LW

| | |
|---|---|
| பெயர் | திருமதி. சோனி ஆறுமுகம் |
| தந்தை பெயர் க/பெ | திரு. விஜய் பாஸ்கர் |
| முகவரி | நெ. கமலம் நகர், பிளாட் நெ113, வெல்டக் ஜக்சன், ஆவடி, சென்னை. |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 07th day of February 2026.

**மனுதாரர் ஆஜர், எதிர்மனுதாரர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை:**

எனக்கு எதிராக எனது கணவர் விவாகரத்து மனு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அந்த விவாகரத்து வழக்கில் எனது கணவரை நான் கொடுமைப்படுத்துவதாக கூறி தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது எனது கணவர் வீட்டில் தான் வசித்து வருகிறேன். நான் பிறந்த இடம் மும்பை ஆகும். நான் எனது கணவரை அசிங்கமாக திட்டுகிறேன் என்றும், அடிக்கிறேன் என்றும் அந்த விவாகரத்து வழக்கில் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். அதேபோல் எனது கணவரின் அப்பாவையும், அம்மாவயையும் அசிங்கமாக திட்டி அவர்கள் வீட்டில் இருக்க முடியாத அளவிற்கு செய்துள்ளேன் என்று அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். தற்போது எனது கணவரின் தாய், தந்தையர் தனியாக சென்றுவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான். நான் எனது கணவரின் அம்மாவை அடித்துவிட்டதாக அதை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். எங்களுக்கு பிறந்த குழந்தையும் எங்களுடன் தான் ஒரே வீட்டில் உள்ளது என்று சொன்னால் சரிதான். வீட்டிற்கு வேண்டிய உணவு மற்றும் சமையல் பொருட்கள் எனது கணவரே வாங்கி கொடுக்கிறார் என்று சொன்னால் சரிதான். தற்போது வரை நான் இந்த வழக்கிற்கு நீதிமன்றத்திற்கு வருவதற்கு ஆகும் செலவை எனது கணவர் Gpay மூலம் அனுப்புகிறார் என்று சொன்னால் சரிதான். தற்போது வரை

எனக்கும், எனது குழந்தைகளுக்கும் வேண்டிய செலவுகளை எனது கணவர் தான் செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். எனக்கும் குழந்தைக்கும் தேவையான அனைத்து செலவுகளையும் எனது கணவர் செய்து வரும்போது நான் தேவையில்லாமல் இந்த வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் நான் எனது கணவருடன் வாழ தயாராகத்தான் உள்ளேன், அவர் அவரது தாயார், மாமா மற்றும் தங்கையின் பேச்சை கேட்டுக்கொண்டு என்னுடன் வாழாமல் டாச்சர் செய்கிறார். அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது கணவர் தற்போது ஓட்டலில் தான் சாப்பிட்டு வருகிறார் நான் உணவு கொடுக்கவில்லை என்று சொன்னால் கடந்த 2025 ஆம் வருடம் வரை நான் எனது கணவருக்கு உணவு கொடுத்து வந்தேன் அதன் பின்பு அவர் வேண்டாம் என்று சொல்லிவிட்டார் அதனால் நான் கொடுப்பதில்லை. நான் அவரை மரியாதை இல்லாமல் அசிங்கஅசிங்கமாக திட்டுவதோடு, வாடா,போடா, நாயே, தெவிடியா பையலே என்று அசிங்கமாக திட்டியதால் அவர் மேற்கண்ட முடிவை எடுத்துள்ளார் என்று சொன்னால் எனது கணவர் என்னை இங்கு இருக்க கூடாது என்றும், விவாகரத்து கொடுத்துவிட்டு போ என்று அவர்தான் டாச்சர் செய்து வருகிறார். எனது மருத்துவ செலவு, குழந்தையின் மருத்துவ செலவு ஆகியவற்றை என் கணவர் தான் செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். உன்னையும் உனது அப்பா, அம்மாவையும் ஜெயிலுக்கு அனுப்பிவிட்டுதான் நான் போவேன் என வீராப்பாக பேசிவிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஒரு நாள் நான் எனது கணவரை கத்தியை எடுத்து குத்த சென்று அந்த சம்பவம் காவல் நிலையம் வரை சென்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் சமையல் அறையில் காய்கறி நருக்கி கொண்டிருந்தபோது அவர் என்னிடம் வந்து சண்டை போட்டார் அப்போது கத்தியுடன் இருந்ததால் அதை வீடியோ எடுத்துக்கொண்டார். எனது கணவரை டாச்சர் செய்வதை தவிர எனக்கு வீட்டில் வேறு வேலை கிடையாது என்றும், அதனால் தான் எனது கணவர் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எனது தேவைகள் அனைத்தும், அவரே கொடுத்துவிடுகிறார் என்பதாலும், எனது குழந்தைக்கு தேவையானதையும் கொடுத்துவிடுகிறார் என்பதாலும், இந்த மனு செல்லத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur